2023 ஏப்ரல் 10]

வகையில் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. நிதி ஆதாரம் கிடைக்கப்பெற்றவுடன், திட்டத்தை நிறைவேற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நிச்சயமாக எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 123, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

123—

காற்றாலை தொழில்நுட்பக் கல்லூரி

***38189—திரு. எம்.ஆர். காந்தி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் காற்றாலை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓர் அரசு Polytechnic *கல்லூரியும், ஓர் அரசு நிதியுதவிபெறும்* Polytechnic *கல்லூரியும் மற்றும் 19 சுயநிதி* Polytechnic *கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், கன்னியாகுமரி மாவட்டத்தில் காற்றாலை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள்.*

திரு. எம்.ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 130 கோடி இந்தியர்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று இந்திய தாய்த் திருநாட்டின் மாண்புமிகு பிரதமர் அவர்கள்*

[2023 ஏப்ரல் 10

அண்மையில் தமிழ்நாட்டு மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். சென்னை-கோவை இடையேயான 'வந்தே பாரத்' இரயிலைத் துவக்கி வைத்து, தமிழக மக்களின் இதயங்களில் நீங்கா இடத்தைப் பெற்றிருக்கும் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு நன்றியைச் சொல்லி வணங்குகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மூலமாக காவல் துறையின் மிகவும் சிறப்பான பாதுகாப்பு உட்பட அனைத்து விதமான ஒத்துழைப்பையும் ஒருங்கிணைத்து பிரதமரின் அனைத்து விதமான நிகழ்ச்சிகளையும் திறம்பட நடத்த வழிவகை செய்திட்ட தமிழக அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில், காற்றாலை தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க முடியாது, வாய்ப்பு இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் தொகுதியில் Wind Energy Institute of Technology கல்லூரியை அமைத்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், சென்னை, பள்ளிக்கரணை சதுப்புநிலப் பகுதியையொட்டி காற்றாலை தொழில்நுட்பக் கல்லூரி இயங்கி வருகிறது. அதேபோன்று, நாகர்கோவிலிலும் காற்றாலை தொழில்நுட்பக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டும். அங்குள்ள பொதுமக்களுக்கு அது பயன்படும். திருநெல்வேலி, தென்காசி உள்ளிட்ட அனைத்து தென் மாவட்டங்களிலும் காற்றாலைகள் அதிகமாக இயங்கி வருவதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காற்றாலை தொழில்நுட்பக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்று மெத்தப் பணிவுடன் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Polytechnic கல்லூரிகளில் புதிய பாடப் பிரிவுகளை உருவாக்குவது என்பது AICTE அனுமதிப்பதில்தான் இருக்கிறது. குறிப்பாக, இதுவரை AICTE-ல் 340 பாடப் பிரிவுகள்

2023 ஏப்ரல் 10]

Polytechnic-கல்லூரிகளில் இருக்கின்றன. அவற்றில் காற்றாலை என்ற பாடப் பிரிவு இதுவரை இல்லை. ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தில், காற்றாலை பற்றிய ஒரு பாடம் மட்டும் syllabus-ல் சேர்க்கப்பட்டு, அங்கு Polytechnic கல்லூரியில் பயில்கின்ற மாணவர்களுக்கு, குறிப்பாக, இயந்திரவியல், மின்னியல் மற்றும் மின்னணுவியல் பாடப் பிரிவுகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு அந்த syllabus-ல் காற்றாலை பற்றிய ஒரு syllabus-ம் சேர்த்து, அதில் பயில்கிற மாணவர்கள் பக்கத்தில் இருக்கிற தொழிற்சாலைகளில் பணிபுரிவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

காற்றாலை தொடர்பான இந்தக் கோரிக்கையைப் பொறுத்தவரையில், AICTE-தான் அனுமதியளிக்க வேண்டும். அந்த அடிப்படையில் மட்டுமல்ல, குறிப்பாக, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பல்வேறு திட்டங்களை, தொழிற்சாலைகளை-- Polytechnic கல்லூரிகள் மூலமாக உருவாக்கி, படிக்கிறபோதே அங்கே பயில்கிற மாணவர்களுக்கு எல்லா இடங்களிலும் அவர்களுக்குரிய உதவியை அளிக்க வேண்டும், கல்வியை மேம்படுத்த வேண்டுமென்ற உணர்வோடுதான் தனியார் நிறுவனங்களோடு அரசும் சேர்ந்து செயல்பட்டு இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. 54 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளை, 2,783 கோடி ரூபாய் செலவில் திறன்மிகு மையங்களாக மாற்ற தமிழக முதலமைச்சர் அவர்கள், நான் முதல்வன் திட்டத்தின்கீழ் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உங்களுடைய கோரிக்கையை ஏற்று, அங்கே இருக்கிற பாலிடெக்னிக் கல்லூரிகளில் இந்தப் பாடத்தை இன்னும் கொஞ்சம் விரிவுபடுத்தி, அவர்களுக்கு எந்த அளவிற்கு வேண்டுமோ, அந்த அளவிற்கு syllabus-ஐ எல்லாம் அதிகரிக்க வேண்டிய முயற்சியை தமிழக அரசு மேற்கொள்ளும்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள்.

திரு. எம்.ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுடைய கோரிக்கையை ஏற்று, வாய்ப்பிருக்குமானால் அகில இந்திய தொழில்நுட்ப கல்வி குழுவோடு இணைந்து அந்தப் பாடப் பிரிவை கல்லூரிகளிலே சேர்க்க உரிய ஏற்பாடுகளைச் செய்வார் என்பதற்காக நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இயங்கி வருகிறது. அங்கு ஏறத்தாழ 1,800–க்கும் அதிகமான மாணவர்கள் பயின்று வருகிறார்கள். பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் அந்தக் கல்லூரிக்கு மாணவர்கள் வந்து பயில்கிறார்கள். ஆனால், அந்தக் கல்லூரிக்குப் போதுமான கட்டட வசதிகள் இல்லை. எனவே, அந்தக் கல்லூரிக்குத் தேவையான அடிப்படை வசதியான கட்டடங்களை கட்டித் தருவதோடு, அங்கு முதுகலைப் பாடப் பிரிவுகள் இதுவரை துவங்கப்படவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முதுகலை பட்டப் படிப்புகளையும் அந்தக் கல்லூரியிலே துவக்கித் தருவார்களா என அறிய விரும்புகிறேன். அந்தக் கல்லூரி அரசுக் கல்லூரி என்பதால் பல்வேறு மாவட்டங்களிலிருந்து மாணவர்கள் அங்கு வந்து படிக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு ஒரு தங்கும் விடுதியும் அமைத்துத் தருவார்களா என்பதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. எம்.ஆர். காந்தி: பதிலைக் கேட்டு அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் பதிலிலேயே கூறினேன். கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், நிதிநிலை அறிக்கையிலே அறிவித்து நிதி ஒதுக்கீட்டை உயர்த்தி இருக்கிறார்கள் என்று சொன்னேன். அதிலே கண்டிப்பாக பாலிடெக்னிக் கல்லூரிகளினுடைய பாடப் பிரிவுகளை எல்லாம் உயர்த்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். அதுவும் குறிப்பாக, மாணவர்களைப் பொறுத்தவரையில், அங்கே இருக்கிற பாலிடெக்னிக் கல்லூரிகளிலேயே, EEE, Mechanical Engineering பிரிவுகளில் மட்டும் கிட்டத்தட்ட 2,183 இடங்கள் காலியாக இருக்கின்றன. Vacancy–யே இருக்கிறது, 2,183 இடங்கள் காலியாக இருக்கின்றன. நீங்கள் சொன்ன அந்தக் காற்றாலை பாடமும் இந்தப் பிரிவுகளில்தான் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. ஆகவே, முதலில் நீங்கள் முயற்சி செய்து, இந்த இடங்களை நிரப்புவதற்கான ஏற்பாடுகளை செய்யுங்கள். கண்டிப்பாக அங்கே

2023 ஏப்ரல் 10]

இருக்கிற மாணவர்கள் பயன் பெறுவார்கள். அங்கே காற்றாலை தொழில்நுட்பக் கல்லூரி வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையையும் நிறைவேற்ற நான் முன்பே சொன்னதைப்போல syllabus-*லேயே அந்தப் பாடத் திட்டங்களைச் சேர்த்து தொழிற்சாலைகளின் முன்னேற்பாடுகளோடு அந்தத் தொழிற்சாலைகளும் இவர்களோடு சேர்ந்து பயிற்சி அளிக்கிற வகையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால், பாலிடெக்னிக் உடன் தொழிற்சாலைகளும் சேர்ந்து பயிற்சி அளிக்க வேண்டும் என்றுதான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள். இருவரும் சேர்ந்து செய்கிறபொழுதுதான், மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும் என்ற உணர்வோடு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். நிச்சயமாக, அதுவும் உங்கள் மாவட்டம் கல்வியில் அதிகமானோர் சிறந்திருக்கிற மாவட்டம். விரைவில் அது நிறைவேற்றப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர்கள் கேட்டது, கலைக் கல்லூரியில்* PG.-*முதுகலை பட்டப் படிப்பு ஆரம்பிக்க முடியுமா? முதல் அரசு கலைக் கல்லூரியை போன வருடம் நீங்கள்தான் கொடுத்திருக்கிறீர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *எப்போதுமே கன்னியாகுமரி என்றால், நீங்கள் கேட்கிறீர்களோ, இல்லையோ, சபாநாயகர்* correct-*ஆக கேட்டுவிடுவார், விடமாட்டார். அவர்* PG Course *வேண்டுமென்று கேட்கிறார். இந்தக் காலத்திற்கேற்ப, அங்கே இருக்கிற தேவைகளுக்கேற்ப* PG course, Ph.D. *கொடுப்பதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 124, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

124—

வேளாண்மைக் கல்லூரி

***18393— திரு. ஆர்.பி. உதயகுமார்:**

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—